வைத்திய சந்திரிகா
Aug 1961

JL
LBM211.N39
N61.23.8
188897

श्री धन्वन्तरये नमः ।

# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

-ஆடி,
வணி

AUGUST
1961





...தி 23
...தி 8

Vol. 23
No. 8



ஆசிரியர்:
பண்டித ஸ்ரீ. மே. ஸௌந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்.
உப ஆசிரியர் & பிரசுரகர்த்தா:
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.


பொருளடக்கம்


| | |
|---|---|
| ...ப்ச்சியின் லக்ஷ்யம் யாது? | 5 |
| | 7 |
| ...டில் வைஸூரி தடுப்புமுறை | 8 |
| ...ல் காலத்தின் முக்கியத்துவம் | 14 |
| ...விக்ஞானம்—(தனி) | 25—32 |



Annual Subscription: Rs. 5/-



3L
LBmaɪ', N39
N61·23·8·
188897



காரியாலயம்: 18, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

ஸ்தாபிதம் : 1902. ✲ போன் நெ. 44 (திருர்)

பிராஞ்சுகள் :

கல்லாய் ரோடு, கோழிக்கோடு
(போன் நெ. 2155);
✶
வடக்கம்தரா, பாலக்காடு
(போன் நெ. 104);
விற்பனை டிப்போ
G. B. ரோட்டில்
✶
திரூர் (போன் நெ. 31)

ஈரோடு (முனிசிபல்
பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில்);
(போன் நெ. 172)
✶
மகாத்மாகாந்தி ரோடு,
எர்ணாகுளம் (போன் நெ. 674)
✶
ஸ்டாட்ச்யூ ரோடு,
திருவனந்தபுரம்
(போன் நெ. 3924)

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக் கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில் நடத்தப்பெறும்.

மானேஜிங் டிரஸ்டி.



# A WORD OF ADVICE

If You are ever in need of Pure Musk, Saffron, Shilajit, Hing, Pearls & Himalayan Drugs etc., etc., | Never make Experiments with Un-Known and Un-Reliable Firms

*Have your requirments from :—*

**KALIA BROTHERS (Regd.)**

JULLUNDUR CITY—N. INDIA

✲

## ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜித், பெருங்காயம், முத்து, ஹிமாலய மூலிகைகள் முதலியன உங்களுக்குத் தேவையானால்— | முன் பின்னறியாததும் நம்பிக்கையில்லாததுமான ஸ்தாபனங்களோடு ஒருபோதும் பரீக்ஷை செய்ய வேண்டா.

✲

உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம் :

கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams: AMRUTHAM P. B. 82 Phone: 2208

# The Arya Vaidya Pharmacy (Coimbatore) Limited.

**H. O.: Trichy Road, Coimbatore-1**

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

| | |
|---|---|
| Madras (Phone 85752), | Kozhikode (Phone 984). |
| Cannanore (Phone 92), | Ernakulam (Phone 494) |
| Palghat (Phone 195), | Ponani (Phone 41), |

Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani.

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

*(ஸ்தாபிதம் 1939)* Phone No. 660

| *ரஸசாலை:* | *ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:* |
|---|---|
| *28, A. தென்னூர் ரோடு,* | *31, சின்னக்கடைத் தெரு.* |
| *திருச்சிராப்பள்ளி 1.* | *திருச்சிராப்பள்ளி 2.* |

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

*வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.*

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம். யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்ரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்த துஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

*விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.*

A. ராகவராவ், *மானேஜிங் டைரெக்டர்*

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி

**கீழ ராஜவீதி, — புதுக்கோட்டை.**

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

**ஸ்ரீ. P. விச்வநாத சர்மா**

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யநாதன்.
உதவி வைத்யர்.

P. விச்வநாத சர்மா
பிரதான வைத்யர்.





# வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 23 | பிலவ — ஆடி, ஆவணி. | பகுதி 8 |
| Vol. 23 | AUGUST 1961 | No. 8 |


आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलीदियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

## ஆராய்ச்சியின் லக்ஷ்யம் யாது?

பூனாவில் சமீபத்தில் பாரதப் பிரதான மந்திரி ஸ்ரீ நேரு அவர்கள் ஓர் ஆயுர்வேத வநஸ்பதித் தோட்டத்தைத் திறந்து வைத்தார். அப்போது அன்னார் பேசுகையில் ஆயுர்வேதத்தில் தமது சர்க்கார் கொண்டுள்ள நன்மதிப்பை நன்கு வெளிப்படுத்தினார். அப்பேச்சின் நடுவே மத்ய சர்க்கார் ஆயுர்வேதத்திடம் ஆதரவு காட்டுவதற்கான லக்ஷ்யத்தைப்பற்றியும் ஸர்க்காரின் ஆயுர்வேத ஆராய்ச்சித் திட்டத்தின் லக்ஷ்யத்தைப்பற்றியும் அன்னார் குறிப்பிட்டுள்ளது மிகவும் கவனிக்கத்தக்கது. சர்க்காரின் லக்ஷ்யம் நேருவின் கருத்துப்படி பின்வருமாறு:—

"விக்ஞான வழியிலே ஆயுர்வேத யூனானி மருந்துகளை ஆராய வசதிகளையும் உத்ஸாஹத்தையும் அளித்து அந்த ஆராய்ச்சியின் பயனாகக் கிடைக்கக்கூடிய மதிப்பிடக்கூடிய அம்சங்களைக்கொண்டு ஆயுர்வேத யூனானி முறைகளை அபிவிருத்தியடையச் செய்வதுடன், அவைகளை நவீன வைத்ய

முறையுடனும் சேர்த்து முடிவில் தனிப்பட்ட ஒரே வைத்ய முறையை நிறுவ முடியும் வகையில் செய்யவேண்டும்."

ஆயுர்வேதத்தைத் தனித்துத் தேசீய வைத்ய முறையாகப் பார்க்க விரும்புபவர்களுக்கு இக்கருத்து கவலையை அளிக்க வல்லது. ஆயுர்வேதாபிமானிகள் விரும்பும் லக்ஷ்யம் வேறு விதமே. அதாவது ஆராய்ச்சிமூலம் ஆயுர்வேத முறையை மதிப்பிட்டுத் தகுதி நிர்ணயித்தபின் அதற்கு தேசீயசிகித்ஸை முறை என்ற மதிப்பளித்து, நவீன யுகத்திற்கேற்பத் தேவையான நாட்டின் ஸுகாதாரப் பாதுகாப்பிலும் வியாதித் தடுப்பிலும் ஏற்படும் பிரச்னைகளைத் தனித்து ஸமாளிக்கும் வாய்ப்பு அது பெற வேண்டும். இதற்கு மாறுபாடாக ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி செய்து தேர்ந்தவைகளை நவீன விஞ்ஞானத்துடன் சேர்த்து அதை பூர்ண தேசீய முறையாக்குவதென்ற லக்ஷ்யமெனில் அப்போது ஆயுர்வேதத்திற்கு இடம் எங்கே? ஆயுர்வேதத்தைப் பக்குவப்படுத்தி ஜீர்ணித்துக்கொண்டு புஷ்டியான அலோபதி என்ற வகையில் ஓநாயின் வயிற்றில் உள்ள ஆட்டைப் போன்று ஏகீகரணம் நடப்பது தானு லக்ஷ்யம்? ஆயுர்வேதப்படிப்பு சுத்தமாகவோ மிச்ரமாகவோ பின்னர் வாழ இடமுண்டா? ஆயுர்வேதத்தின் ஸொத்து முழுவதும் அலோபதியினதாக மாறியபின் என்ன மீதம் இருக்கப்போகிறது? இது ஆயுர்வேதத்தை அழிக்கும் சூழ்ச்சியாகவல்லவா பரிணமிக்க விருக்கிறது. இதனுல்தான் அரசாங்கமோ மற்றவர்களோ ஆராய்ச்சி என்ருல் மருந்திலோ சரக்கிலோதான்; முறையில் அல்ல என்ற குறுக்கு வழியில் சென்று வருகிறது. மருந்துகளால் தான் அலோபதிக்கு லாபமே தவிர, முறையால் அல்ல. முறையில் ஆராய்ச்சி செய்வதால் ஆயுர்வேதம் வளருமே தவிர அழியாது. அதனுல் சிகித்ஸாபத்ததியில் அடிப்படைத் தத்துவங்களில் ஆராய்ச்சி செய்வதைப்புறக்கணித்துவிட்டு மருந்து ஆராய்ச்சியிலேயே இதுகாறும் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

அதனுல் ஆயுர்வேதத்தின் ஆராய்ச்சியில் லக்ஷ்யம் என்ன? எதில் ஆராய்ச்சி அவசியத்தேவை? என்பது ஸ்பஷ்டமாக வகுத்துக் கொள்ளுவது இன்று மிக அவசியமாகின்றது. சிகித்ஸை செய்யும் முறையில் நிர்தோஷமான லகுவான உபகாரியான வழி எது என்ற மதிப்பீட்டில் ஆயுர்வேதத்தையும் அலோபதிகளையும் இலக்காக்கி இவ்விரண்டிலும் ஜனஹிதகாரியான முறை எது என்ற நிர்ணயத்திற்குப் பிறகு தேர்ந்த ஒன்றை வளர்க்க முற்படுவது நியாயமானதாகும். அலோபதியின் அடிப்படையில் ஆயுர்வேதத்திலுள்ள மதிப்பிடக்கூடிய பகுதிகளை ஆராய்ந்து ஜீர்ணித்துக்கொள்ள விடுவதை விட ஆயுர்வேதத்தின் அடிப்படையில் அலோபதியை ஆராய்ந்து ஜீரணித்துக்கொள்ள விடுவது தேச கௌரவத்திற்கும் ஸுகாதாரப் பாதுகாப்பிற்கும் ஏற்றதொரு காரியமாகும்.

இந்நிலையில் சர்க்காரின் லக்ஷ்யத்தின் பயங்கரத்தை மனதிற்கொண்டு ஆராய்ச்சித்துறையைத் திருத்தி அமைக்க முற்படுவது ஆயுர்வேதாபிமானிகளின் முதற்கடமை.

செய்தி:

## திருச்சி ஆயுர்வேத ஸபை

ஷை ஸபையின் 5-வது ஸம்பாஷாபரிஷத் கூட்டம் 23—7—61 ஞாயிற்றுக்கிழமை மாலை 4—15 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. ஸபைத்தலைவர் ஸ்ரீ T. S. ஈஸ்வரய்யரின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் ஆயுர்வேதாசார்ய அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வஹித்தார்கள்.

"பரிணமை சூலம்" என்பது பற்றி சர்ச்சை நடைபெற்றது. அங்கத்தினர்கள் சர்ச்சையில் கலந்துகொண்டு பேசுகையில், பரிணமசூலத்தின் நிதானம், ஸம்ப்ராப்தி முதலானவைகளை நன்கு விரிவாகக்கூறி, அவரவர் தங்கள் அனுபவத்தில் இவ்வியாதியின் பல்வேறு நிலைகளில் கொடுத்து குணமளித்த அநேக ஔஷதங்களின் செய் முறைகளையும், உபயோகிக்க வேண்டிய விதங்களையும் எடுத்துரைத்தார்கள். இவ்வியாதியில் ரஸகர்ப்பூரக்கட்டு, கல்யாண க்ஷாரம், சங்கபஸ்மம், வராடிகா பஸ்பம், சுக்தி பஸ்மம், கூஷ்மாண்டகண்டம் இவைகள் மிகுந்த உபகாரத்தைக் கொடுக்கின்றன என்பதாகச் சர்ச்சையில் கூறப்பட்டது.

முடிவில், ஸபைக் காரியதரிசி ஸ்ரீ N. C. S. ராகவன் அவர்கள் வந்தனோபசாரம்கூற, கூட்டம் மாலை 5—45க்கு இனிதே முடிவடைந்தது.

# தமிழ் நாட்டில் வைஸூரி தடுப்புமுறை

[வைத்ய S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ,
வைத்ய T. S. ஈச்வர அய்யர் L. I. M.]

---

[நாட்டின் பல்வேறு பகுதிகளில் நாட்டின் பழைய முறைப்படி வைஸூரி முதலிய தொத்துநோய்கள் பரவாமலும், வந்த பின் பரவாமலும், வந்தநோய் பலப்படாமல் அடங்குவதற்கும் கையாண்டுவரும் பழக்கவழக்கங்களைப் பற்றிய குறிப்புகளை எழுதியனுப்பும்படி மத்ய சுகாதார இலாகாவின் நாட்டு வைத்ய முறை ஆலோசகர் காரியாலயத்திலிருந்து வந்த சுற்றறிக்கையின்படி நமது மகாமண்டலத்தின் சார்பில் பல வைத்தியர்களுடனும் அனுபவமுள்ள பொது மக்களிடமும் தொடர்புகொண்டு தயாரித்து ஆலோசகருக்கு அனுப்பிய குறிப்புகளின் சுருக்கமான தமிழாக்கம் அந்த குறிப்புகளைத் தொகுத்தளித்த வைத்யர்களாலேயே செய்து தரப்படுகின்றது. வாசகர்களுக்கு இது பெரிதும் பயன்படும் என நம்புகிறோம். —ஆசிரியர்.]

மத்ய அரசாங்கத்தின் நாட்டுவைத்ய முறை ஆலோசகர் காரியாலயம் ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி ஆயுர்வேதாசார்ய அவர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் தமிழ் நாட்டில் வைஸூரியின் பல்வேறு பிரிவுகளுக்கான பெயர், வேற்றுமை அறியும் வகை, சிகித்ஸை, தடுப்பு முதலியவைகளில் கையாளப்படும் முறைகள், வயதான பாட்டிமார்கள் போன்ற இவ்வியாதியில் அனுபவம் மிகப்பெற்ற பெரியோர்களின் வழி இவைகளைத் தொகுத்து அனுப்புமாறு கேட்டிருந்தனர். இதற்கான விபரங்களைச் சேகரித்து அனுப்பும் பொறுப்பை தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் ஏற்று ஸ்ரீ நடராஜ சாஸ்திரி, ஸ்ரீ A. ராகவராவ் நாங்கள் இருவர் சேர்ந்த குழுவொன்று இக்குறிப்புகளை பரிசீலித்து எங்களிருவரிடமும் அதை உருவகப்படுத்தும் பொறுப்பைக் கொடுத்தது. இந்த வாய்ப்பளித்ததற்கு மஹாமண்டலத்திற்கு எமது நன்றிகள்.

எங்களது குறிப்பின் ஸாராம்சம் பின்வருமாறு:—

வைஸூரி நாட்டில் பல உருவில் காணப்படுகின்றது. நூல்களிலும் பெரியோர்களின் வழக்கிலும் பதினைன்கு முக்யப் பிரிவுகள் காணக்கிடைக்கின்றன. அவையாவன:-பால் அம்மை, பனையம்மை, வரகுதிரி, கொள்ளம்மை, கல்லுதிரி, கடுகம்மை,



மெழுக்கன், உப்புதிரி, கரும்பனசை, வெந்தய அம்மை, பாசிப் பயறு அம்மை, விச்சிரிப்பு, நீர்க்குளவன், தவளையம்மை என. இந்தப் பெயர்கள் நோயின் அமைப்பிலும் உருவிலும் அதிலுள்ள பாலின் அமைப்பிலும் உள்ள வேற்றுமைகளை நன்கு புலப்படுத்துகின்றன. இவைகளில் அதிகமாக பால் அம்மை எனப்படும் பெரியம்மை, விச்சிரிப்பு, சிச்சிலுப்பை எனப்படும் சின்னம்மை, தட்டையம்மை, விளையாட்டம்மை எனப்படும் மணல்வாரியம்மை, கொப்புள அம்மை எனப்படும் நீர்க்குளவான் இவை காணப்படுகின்றன. மற்றவை மிகக்குறைவாகவே ஏற்படுகின்றன.

பொதுமக்களுக்கு இன்று எல்லா அம்மைகளையும் பிரித்தறியும் திறமை குறைந்து வருகிறது. அதற்குக் காரணம் (1) பரம்பரையாக வந்த பழக்க வழக்கங்களில் பயிற்சி சென்ற தலைமுறையுடன் நின்றுவிட்டது. அந்தத் தலைமுறையில் வந்த பாட்டிகள் குடும்பத்தின் ஸுகாதாரப் பாதுகாப்பின் வழியறிந்தவர்கள். அவர்களே அப்பொறுப்பு முழுவதையும் வகித்தனர். வைத்யர்கள் கிடைக்காத விடங்களில் வியாதி நிதானத்திலும் சிகித்ஸையிலும் திறமையை வெளிப்படுத்தி வந்தனர். அந்த சமுதாயம்—தலைமுறை மறைந்து விட்டது (2) வைத்யர்கள் இந்நோயை நேரிடையாக சிகித்ஸை செய்ய அனுமதிக்கப் படுவதில்லை. அதனால் வைத்யர்களுக்கும் இதன்பரிசயம் குறையும்படி நேரிட்டது.

அம்மை என்ற சொல் தாயைக் குறிக்கும். அம்பிகையின் அருளுதவிகொண்டே இந்நோய் குணப்படும் என்பதை இது குறிக்கின்றது. இந்த தாய்தெய்வத்தை மஹாமாயி, மஹாமாரீ, மாரியம்மன், மாரியாயி, சீதளா என்று அழைக்கிறார்கள். வைஸூரி, காலரா, பிளேக் போன்ற கொடும் மாரிநோய்களை அடக்கும் சக்தி இந்த தெய்வத்திடம் இருப்பதாக நம்பிக்கை மக்களிடையே ஊன்றி இருக்கிறது. நோய் அம்மை என அறிந்ததும் இதுவரை செய்துவந்த சிகித்ஸைகளை நிறுத்தி இந்த தெய்வத்திடம் முழுப்பொறுப்பையும் விட்டு அவளை வழிபடுவதையே நோயாளியும் நோயாளியைச் சார்ந்தவர்களும் முக்கியப் பணியாகக் கொள்கிறார்கள். இதில் படித்தவனும் பாமரனும் ஏழையும் பணக்காரனும் ஒரு நினைப்புள்ளவனே.

எல்லா தொத்து நோய்களையும் அம்மை எனக்குறிப்பிடுவதும் நாட்டில் பழக்கத்திலுள்ளது. எங்கு பிறருடன் பழகா

மல் நோயாளியைத் தனித்து பாதுகாக்கவேண்டுமோ; எங்கு தாய் தெய்வத்தின் அருள் உதவிதான் நோய் குணமாவதற்குத் தேவையாக எதிர்பார்க்கப்படுகிறதோ; அங்கெல்லாம் அம்மை என்ற பெயரால் அழைப்பது நாட்டின் பழக்கம். அதனால் அம்மை என்ற சொல் சற்று பரவலாக நிற்கிறது. அதனால்தான் பொன்னுக்கு வீங்கி மென்னிக்கு வீங்கி எனப்படும் தாளம்மை, விஸ்போடகம் எனப்படும் ஒத்தம்மை இவைகூட அம்மை என்றே கூறப்படுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் உள்ள மற்றொரு தொடர்பு அம்மன் பச்சிலை எனப்படும் வேப்பிலையும் அம்மன்பூச்செனப்படும் மஞ்சளும் இவை எல்லாவற்றிற்கும் சிகித்ஸையின் பெருவாரியாகப் பயன்படுவதே.

*சிகித்ஸையின் நோக்கமும்-வழியும்:-* நோயாளியை உடன் பெரும் புழக்கமுள்ள இடங்களிலிருந்து பிரித்துத் தனிப்படுத்துவது. மாதவிடாய் நின்றுபோன கிழவிகள், இந்நோய் வந்து இயற்கையான தடுப்புசக்தி பெற்றவர்கள் மட்டுமே நோயாளியை சுச்ரூஷை செய்ய அனுமதிக்கப்படுவர்கள். குழந்தைகள் இள வாலிபர்கள், இளம் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. எண்ணெய் குளி, க்ஷவரம், ஆண் பெண் சேர்க்கை, தாளித்தல், காரமான நெடி பரப்புதல் இவை தடைபடுத்தப்படுகின்றன. வீட்டிற்கு வருபவர்களும் இந்த கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப் படுகின்றனர். வீட்டிற்கு வெளியிலிருந்து வருபவர்கள் அன்று எண்ணெய் தேய்த்துக்கொண்டவர்களாகவோ க்ஷவரம் செய்து கொண்டவர்களாகவோ முதல் இரவு மைதுனம் புரிந்தவர்களாகவோ இருக்கக்கூடாது. இந்த கட்டுப்பாட்டிற்கு மீறினால் நோயாளியின் நோய் அதிகமாகும். எண்ணெப் ஸ்நானம்முதலியன செய்துகொண்டவர்களுக்கு இந்நோய் பரவலாம் என்ற பீதியை விட ஏற்கனவே நோய் கொண்டவனின் நோய் அபாய நிலையை அடையும் என்ற பீதியே மிகுந்துள்ளது இங்கு கவனிக்கத் தக்கது. இந்த விஷயத்தில் கவனத்தைக் கொணர வீட்டின் வாசற்படியின் மேலேயே நன்கு கண்ணில்படுமாறு அம்மைநோய் வந்துள்ளதன் அடையாளமாக அம்மன் பச்சிலையான வேப்பிலை செருகப்படுகின்றது. தேவியின் பிரீதியை சம்பாதிப்பதற்கும் நோய் பரவாமல் தடுப்பதற்கும் நோயாளியின் வேதனை குறைவதற்கும் நோயாளியின் படுக்கையைச் சுற்றியும் வைப்பார்கள். வாயிற்படியில் வேப்பிலையைக் கண்டவன் தனது நிலையை நிதானித்து அவசியத்தை உணர்ந்தபின்னர் கைகால் அலம்பி சுத்தமாகத் தான் உள்ளே நுழைவான். குழந்தைகளும் மற்ற இளவயதினரும் உள்வர மாட்டார்கள். நோயாளியைச் சுற்றி



யுள்ள இடம் சுத்தமாகப் பாதுகாக்கப்படும். மலஜலங்கள் வராட்டிகளில் பெறப்பட்டு கொல்லைகளில் குழிகளிலிட்டுப் புதைக்கப்படும். எறும்பு முதலிய உபத்ரவங்கள் வராமலிருக்க நோயாளியின் படுக்கை மாற்றப்படும். நோயாளி நடமாட அனுமதிக்கப்படுவதில்லை. புகை போடுவது தாளிப்பது போன்றவை மூக்கின் மூலம் உறுஞ்சப்பட்டு நோயை பரப்பலாம் என்ற நோக்குடன் அந்த வீட்டில் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. நோயாளிக்கும் எங்கும் விரணமாயிருக்கிறபடியால் காரநெடி சிரமப்படுத்தும் என்பதும் அதற்கு முக்ய காரணம். நோயாளிக்கு ஏற்படும் அரிப்பு எரிச்சலைத் தடுக்கத் தானே சொரிந்து கொள்வதைத் தடுக்க வேப்பிலையால் லேசாகத் தடவி விடுவது உண்டு.

ஜ்வரம் நின்று முத்து வெளிக்கிளம்பும் வரை அரிசிக் கஞ்சி சர்க்கரை சேர்த்துக் கொடுப்பதும், முத்துவந்ததும் தாகத்திற்கு ஆறியவென்னீர், இளநீர், பதனி போன்ற குளிர்ந்த பானங்கள் கொடுப்பதும், முத்து காய ஆரம்பித்ததும், கஞ்சி மோர் சேர்த்துக்கொடுப்பதும், மொந்தன் அல்லது பேயன் வாழைப்பழம், பனம் நொங்கு, காய்ந்த திராக்ஷை, பேரிச்சை முதலியன கொடுப்பதும் வழக்கம். வெங்காயத்தை நெய்யிலோ சிற்றுமணக்கெண்ணெய்யிலோ வதக்கியோ, பச்சையாகவோ கொடுப்பது உண்டு. இவை எல்லாம் நோயாளியின் ஜீரண சக்தியையும் கப உபத்ரவங்களின்மையையும் நன்கு கவனித்தே கொடுப்பது வழக்கம். மலபந்தம், பேதி, மார்பில் கபக்கட்டு முதலிய உபத்ரவங்களிருப்பின் இவ்வுணவுகளை நிலைக்கேற்பக் கட்டுப்படுத்தி கஞ்சி முதலிய ஆகாரங்களை உசிதமானபடி கொடுப்பதுதான் அனுபவமுள்ளவர்களின் வழி. சிலர் இந்நிலையில் கவனக் குறைவால் ஆகாரத்தில் கட்டுப்பாடில்லாமல் நோயைக் கட்டுக்கடங்காமற் செய்து பரிதவிப்பதுமுண்டு. முத்து மறைந்து புண் ஆறும் தறுவாயில் நோயாளிக்கு தெளிவு ஏற்பட்டதும் 2—3 ஓமஜல ஸ்னானம் செய்வித்துப் பிறகு எண்ணெய்க் குளி செய்வித்தல் வழக்கம். ஸ்னானத்திற்கான ஜலம் வேப்பிலை கடுக்காய் போன்ற நீர்க்கனத்தைக் குறைக்கும் பொருள்கள் சேர்த்துக் காய்ச்சப்பட்டிருக்கும். இதுவே பொது முறை.

மருந்துகளைக்கொண்டு சிகித்ஸை செய்விப்பது பழக்கத்தில் இல்லை எனினும் அனுபவம் மிக்கவர் நிலைகளுக்கேற்பு கைவைத்யம் செய்வது காணப்படுகின்றது. அவை பின் வருமாறு :—

**ஜ்வர ஆரம்பத்தில் ஜ்வரத்தின் கடுமையைக் குறைக்க :—** கால்களை வெந்நீரில் நனைத்திருப்பது, பகல்வேளையில் சூடான கஞ்சி, ஆகாரம் சாப்பிட்டு வியர்வையை வெளிப்படுத்துதல், நவச்சாரம் சேர்ந்த ஜலம் கொடுத்தல், மான்கொம்பு, ருத்ராக்ஷம், பவழம், முத்து போன்ற ஹிருதயத்திற்குப் பலமளிப்பவைகளும் ஜ்வரதாபத்தைக் குறைப்பவைகளும் நோயின் கடுமையைக் குறைப்பவைகளுமானவைகளில் ஒன்றை பால் கலந்து இளநீரில் உரைத்துக்கொடுப்பது.

**முத்து வெளிப்படுவதில் தாமதத்தைத் தவிர்க்க:** ஆட்டு ஸூப்பு சாப்பிடக் கொடுப்பது, கற்பூரம் கலந்த ஜலத்தைக் குடிப்பது.

**பிதற்றலைக் குறைக்க :—** பெருங்காயம், கஸ்தூரி, சூடம் இம்மூன்றும் கலந்த யோகத்தால் ஸந்நிபாதநிலையை மாற்றுவது ஜடாமாஞ்சி, குரோசாணி ஓமம் முதலியவைகளின் கஷாயத்தால் தூக்கத்தை உண்டாக்குவது, மனச்சாந்தி அளிப்பது. தூக்கம் மிகவும் குறைந்தால் சிலர் அபினும் கொடுப்பது உண்டு.

**முத்து உட்புறம் பாய்வதைத் தடுக்க :** ஜீரகம், காசுக்கட்டி, தேத்தான் விதை இவைகளில் ஒன்றை இளநீரிலிட்டு கொதிக்க வைத்து வடிகட்டிக் கொடுப்பது, மான் கொம்பை அரைத்து ஜலத்தில் குழப்பிக் கொடுப்பது.

**அரிப்பு குறைய :—** அரிசிமாவைத் தூவுதல், வேப்பிலையால் சொரிந்துகொள்ளுதல். அரிசிமாவைத்தூவ பழுத்தமுத்து காயும்.

**மலக்கட்டு நீங்க :** ரேவல்சீனி, கடுக்காய், ரோஜாமொக்கு திராக்ஷை இவைகளைக் கஷாயமிட்டுக் குடிப்பது.

**தொண்டை எரிவு நீங்க :** வெண்டைவித்து கஷாயம், இலவம் பிசின் கஷாயம் இவைகளால் கொப்பளிக்கலாம்.

**உள்ளுறுப்புகளிலிருந்து ரத்தக்கசிவை நிறுத்த :—** மான் கொம்பு பவழம் முத்து இவைகளை ஜலத்தில் அரைத்துக் கலக்கிக் கொடுப்பது.

**கண்களில் அழற்சி குறைய :—** அன்னக்கிழியில் வெண்ணெய் சேர்த்து நீராரத்தில் நனைத்து இதமாக கண்களில் ஒத்தடம் கொடுப்பது.

**கண்களில் முத்து ஏற்படாதிருக்க :—** வெங்காயத்தை மென்று குதப்பி அந்த வாயால் நோயாளியின் கண்களில் ஊதுவது.



**கண்களின் விரணத்தில் :—** இளம் பனங்குருத்துச் சாற்றைப் பிழிவது.

**ஆருத புண்களில் :—** தேங்காய்த் துருவலையும் புளியங் கொட்டைத் தோலையும் அரைத்துத் தேங்காய் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி எடுத்த எண்ணெயை மேல் தடவிக்கொள்வது.

வியாதி நீங்கியதும் பருத்திவிதை, அத்திப்பிஞ்சு, ஜாதிக்காய், ஜீரகம் இவைகளையரைத்துச் சாப்பிட உள்புண் ஆறும். தெம்பு கிட்டும்.

வேப்பிலை, மஞ்சள், அருகம்புல், இவைகளையரைத்துத் தயிர் விட்டுக் குழப்பி உடலில் பூசி ஸ்னானம் செய்ய தோல் வலுப்பெறும்.

வெங்காயம், பழையபுளி, எலுமிச்சம்பழம், நெல்லி, பனை வெல்லம், பயறு, வாழைக் கச்சல், வாழைப்பழம், அத்திப் பிஞ்சு, பசுவின் மோர், இளநீர், இளந்தேங்காய், பனநொங்கு இவை உணவுப் பொருள்களில் அதிகமாகச் சேர்க்கப்படுபவை.

நிலவேம்பு, அதிமதுரம், மரமஞ்சள் வேப்பம்பட்டை, நன்னாரி, விளாமிச்சை இவைகளின் கஷாயம் சாப்பிடுவது உண்டு.

மாங்காய், மாம்பழம், நல்லெண்ணெய். கடுகு, மிளகாய், புதுப்புளி இவை நீக்கற்பாலன.

**வராமல் தடுக்க :—** நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த ஸதாசாரம் இந்நோய் தடுப்பில் மிகவும் பெரிய பலமாக இதுகாறும் இருந்து வந்துள்ளது. மெய் மனம் ஆத்மா என்ற மூன்று நிலைகளும் நல்ல வழியிலே செல்வதுதான் இந் நோய்க்கு அணை. பவழம், ருத்ராக்ஷம், ஸ்படிகம், முத்து, வெள்ளைக் குங்கிலியம், கஹ்ரூபா, கோரோசனை, குங்குமப்பூ, மான்கொம்பு இவைகளையரைத்துக் கலக்கிய ஜலம், தாழைத் தீநீர் அல்லது கஷாயம், தாழை எண்ணெய்இவைகளைச்சாப்பிடுவது, ருத்ராக்ஷம், பவழம் முத்து இவைகளை கழுத்தில் தரிப்பது, முதலீற்றுக் குதிரைப்பால் சாப்பிடுவது முதலியவை சிறந்த தடுப்பு முறைகளாகக் கையாளப்படுகின்றன.

இந்நோயில் குணம் தரவல்ல பல மருந்துமுறைகள் சித்த, ஆயுர்வேத முறைகளில் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவை பெரும்பாலும் தேச ஆசாரத்தின் காரணமாக வழக்கில் வராமலே நின்றுவிட்டன என்பதும் கவனிக்கத்தக்கது.

# சிகித்ஸையில் காலத்தின் முக்கியத்துவம்.

[வைத்ய. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி.]

(முன்னிதழ் தொடர்ச்சி.)

காலத்தின் மற்றொரு நிலையான ரோகி அல்லது ரோகத்தின் தற்காலநிலை ஆவஸ்திககாலம் எனப்படும். இதைச் சிறிது ஆராய்வோம். ரோகி அல்லது ரோகத்தின் நிலை என்பதால் ரோகத்தின் தருண - ஜீர்ண நிலை, ஆம - பச்யமான - பக்வநிலை, வமநாதி - சிகித்ஸைக்கேற்ற நேரம், ஔஷதத்திற்கேற்ற நேரம் முதலியவை குறிப்பிடப்படுகின்றன. அந்த அந்த நிலைகளுக்கேற்ப சிகித்ஸை செய்வதே இக்கால நிர்ணயத்தால் ஏற்படும் பயன். ஒரு நிலையில் செய்யப்படும் சிகித்ஸை அந்நிலை மாறியபின் வேறு பயனைக் கொடுக்கலாம். நோயின் ஆமநிலையில் செய்யப்படும் சிகித்ஸை வேறுபயனைக் கொடுக்கலாம். நோயின் ஆம நிலையில் செய்யப்படும் சிகித்ஸை வேறு. அதுவே பக்வ - ஜீர்ண நிலையில் மாறும். அதனால் ஒன்றின் தகுந்த காலமானது மற்றொன்றிற்கு அகாலமாகும். நவஜ்வர நிலையில் லங்கனம் செய்விக்கலாமானதால் லங்கனத்திற்கு அது காலம், கஷாய ஸேவனத்திற்கு அகாலம் என்றவாறு. சிகித்ஸையின் சுத்தியையும் சித்தியையும் பெற விரும்புபவன் ரோகியின் நிலைகளை அவ்வப்போது நன்கு பரீக்ஷித்து வரவேண்டும் என்பதை கால நிர்ணயமுறை வற்புறுத்துகிறது. காலம் கழித்தோ (அதிபதித காலம்) காலம் வருமுன்னரோ (அப்ராப்த காலம்) செய்யப்படும் எக்காரியமும் வீணே. அதனால் ரோகியின் நிலைக்கேற்ற சிகித்ஸா காலத்தையும் ஔஷதத்திற்கேற்ற வேளைக்கான ஔஷத காலத்தையும் அறிந்து வைத்யம் செய்வது அவசியமாகும்.[1]

---

1. आतुरावस्थास्वपि तु कार्याकार्यं प्रति कालसंज्ञा। तद्यथा- अस्यामवस्थायामस्य भेषजस्याकालः, पुनरन्यस्येति। एतदपि हि भवत्यवस्थाविशेषेण। तस्मादातुरावस्थास्वपि हि कालाकालसंज्ञा। तस्य परीक्षा—मुहुर्मुहुरातुरस्य सर्वावस्थाविशेषावेक्षणं यथावद्भेषजप्रयोगार्थम्। न ह्यतिपतितकालमप्राप्तकालं वा भेषजमुपस्थाप्यमानं यौगिकं भवति। कालो हि भैषज्यप्रयोगपर्याप्तिमभिनिर्वर्तयति। (சரக— விமானஸ்தானம். 8 அத்.)

ஒரு நாளில் பல்வேறு வேளைகளில் பல பல சிகித்ஸைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. முற்பகலில் வமனம் செய்விப்பது நித்யக காலத்தை ஒட்டியது. சில கடுமையான மருந்துகளை பலவானாகில் வெறும் குடலிலேயே கொடுப்பதென்பதும் துர்பலனாகில் ஆகாரம் கொடுத்த பின்னர் கொடுப்பதென்பதும் ரோகநிலையை யொட்டியதால் ஆவஸ்திக காலத்தை ஒட்டியது. முன் உண்ட உணவு ஜீர்ணமான பின்னர் மருந்து கொடுக்க வேண்டுமென்றோ ஜீர்ணமாகிக் கொண்டிருக்கும் நிலையிலோ உணவு உட்சென்றவுடனேயோ கொடுக்க வேண்டுமென்றோ நிர்ணயிக்கும்போது ஆம—பச்யமான—பக்வநிலைகள் மனதிற் கொள்ளத் தக்கவையாகின்றன. ஆக தினம் (தினாபேக்ஷம்), ருது (ருத்வபேக்ஷம்), நோயாளி (ஆதுராபேக்ஷம்) மருந்து (ஔஷதாபேக்ஷம்) வியாதி (வியாத்யபேக்ஷம்) உணவின் ஜீர்ணம் (ஜீர்ணலிங்காபேக்ஷம்) இவைகளை யெல்லாம் தனித் தனியே அபேக்ஷித்து காலநிர்ணயம் செய்யவேண்டி யிருக்கிறது.*

ஔஷதாபேக்ஷ காலத்தில் சிறிது விவரணம் தேவையிருக்கிறது. ஔஷதத்தை தனிப்பட்ட பலனை எதிர்பார்த்துக் குறிப்பிட்ட வேளையில் கொடுக்கும் முறையையே இது குறிப்பிடுகின்றது. ஔஷதாபேக்ஷகாலத்தை **அநந்நம், பிராக்பக்தம், மத்யே பக்தம், அதோபக்தம், ஸபக்தம், ஸாமுத்கம், அந்தராபக்தம், கிராஸம், கிராஸாந்தரம், முஹுர்முஹு:** என்று சரகர் பிரிக்கிறார். வாக்படர் நைசம் என்ற பிரிவையும் சேர்த்து பதினொன்றாகக் கணக்கிடுகிறார். இதன் முறை பின்வருமாறு :—

1. அநந்நம் — காலையில் வெறும் வயிற்றிலே எனக்கூறும் வேளை. காலையில் ஆகாரம் செய்வதற்குமுன் காலியாயிருக்கும் வயிற்றில் மருந்தை உட்கொண்டு அம்மருந்து ஜீர்ணமானதும் உணவை ஏற்பது அநந்நஸேவன முறையாகும். இம்மருந்தில் மருந்து வீர்யம் அதிகமாகும். பின்னர் கூறப்படும் பத்துவித வேளைகளிலும் அன்னத்துடன் கூடவே மருந்து குடலில் தங்கக் கூடுமானதால் அன்னத்தால் மருந்தின் சக்தி அமுக்கப்படலாம். பலவானானவனே இவ்வேளையில் இவ்விதம் ஔஷதம் ஸேவிக்கக்கூடும். துர்பலனெனில் ஔஷதவீர்யத்தை ஸஹிக்க சக்தியற்று உபத்திரவப்படுவான். ஆக துர்பலனுக்கு இந்த அநந்ந

---

* दिनातुरौषधव्याधिजीर्णलिंगर्त्ववेक्षणम्।
कालं विद्यात्। (சரக சுகித்ஸை 30 அத்.)

ஸேவநம் உசிதமல்ல.* தோஷங்களைக் குறிப்பாகக் கொண்டாலும், கபகோஷ்டனாகவோ, கபம் மிகுந்த ரோகத்திலோ இம்முறை குணம் தரவல்லது. ஆமாசயம் வெற்றிடமாக இருக்கும் போது கபஸ்தானமான ஆமாசயத்தில் நேரிடையாக மருந்து சேர்ந்து தன் சக்தியைக் காட்ட முடியும். ரோகம் அடியோடு விலக — ஸமூலநாசமடைய அநந்ந காலமே சிறந்ததாகின்றது. உதாரணமாக இரவு ஒரு மனிதனுக்கு பேதிக்குக் கொடுக்கும் போது அயோக—மித்யா யோகங்கள் ஏற்படுவதுபோல, காலத்தில் ஏற்படுவதில்லை. ஔஷதம் நேரிடையாகக் குடலில் வேலை செய்ய முற்படுவதை உணவு தடை செய்யாததே அதன் காரணம். இதன் கடுமையை உத்தேசித்து பாலர்கள், விருத்தர்கள், ஸ்திரீகள், பயந்தவர்கள், மெலிந்தவர்கள், இவர்களுக்கு அவசியமின்றி இந்த வேளையில் மருந்து ஸேவிக்கவைப்பதில்லை.† பொதுவாகக்கூறின்-பித்தகபப்பிரதானமான நோய்கள்; விரேசனம் வமனம் லேகனம் கர்சனம் என்ற பலனை உத்தேசித்துக் கொடுக்கும் மருந்துகள், கஷாயம் போன்ற ஔஷதங்கள் இவைகளுக்கேற்ற காலமிது. இதை நிரந்நகாலம் — அபக்தகாலம் என்றும் குறிப்பிடுவதுண்டு. (தொடரும்.)

---

* रोग्यपेक्षो यथा प्रातर्निरन्नो बलवान्पिबेत् ।
भेषजं लघुपथ्यान्नैः युक्तमद्यात्तु निर्बलः । (சரக சிகித்ஸை 30 அத்.)

† वीर्याधिकं भवति भेषजमन्नहीनं
हन्यात्तदामयमसंशयमाशु चैव ।
तद्बालवृद्धवनितामृदवस्तु पीत्वा
ग्लानिं परां समुपयान्ति बलक्षयं च । (ஸுச்ருத உத்தா. 64 அத்.)
कफोद्रेके गदेऽनन्नं बलिनो रोगरोगिणोः । (அ. ஹ்ருதயம். ஸூத்ர. 13)

---

ஸ்ரீரங்கம் ஸ்ரீலக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத
தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

ஜூலை மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 803 | 1928 |
| பெண்கள் | 695 | |
| சிறுவர் | 430 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் பண்ணை,



பஹிஃபிரகோஷ்ட நரம்பு[1]

புஜத்தின் இருதலைத் தசை[2]

ஸிரைதமனிகளில் அடிபடுவதால் அவை சிதைவுற்று ரத்தம் அதிக அளவில் வெளியாகி கை சூம்பி விடும். நரம்புகளில் அடிபடுவதால் கை வற்றிவிடும்.

**10. லோஹிதாக்ஷ மர்மம்:—** பாஹ்வீ மர்மத்திற்குமேல் கக்ஷாஸந்திக்குக் கீழ் புஜத்தின் மேல் பக்கத்திலுள்ள ஸிரா மர்மம், வைகல்யகரப்பிரிவில் சேர்ந்தது. அரை அங்குலப் பருமன் உள்ளது. இதில் அடிபட ரக்தக்ஷயம், பக்ஷாகாதம், கை சூம்பிப்போதல், இளைப்பு இவை ஏற்படும்.[3]

இந்த மர்ம அமைப்பில் கீழ்க்கண்ட உறுப்புகள் பங்கு கொள்கின்றன.

பாஹூ தமனீ.[4]
கக்ஷாதர தமனீ.[5]
மத்யப்பிரகோஷ்ட நரம்பு.[6]
அந்தப்பிரகோஷ்ட நரம்பு.[7]
மார்பை மறைக்கும் தசை பெரியது.[8]
மார்பை மறைக்கும் சிறிய தசை.[9]

**11. கக்ஷதரமர்மம்:—** மார்பிற்கும் கக்கத்திற்கும் நடுவே உள்ள ஸ்நாயுமர்மம்.[10] வைகல்யகர மர்மப்பிரிவைச் சேர்ந்

---

1. Radial nerve.
2. Biceps brachei muscles.
3. बाह्वोः ऊर्ध्वमधः कक्षासन्धेर्बाहुमूले लोहिताक्षं नाम। तत्र लोहितक्षयेण पक्षाघातो बाहुशोषो वा ।
4. Brachial artery.
5. Axillary artery.
6. Median nerve.
7. Ulnar uerve.
8. Pectoralis major.
9. Pectoralis minor.
10. வாக்படர் இதனை ஸிராமர்மம் என்கிறார். இங்கு ஸிரைகளைவிட தசைநார்களே அதிக முக்யத்வம் பெற்றுள்ளன எனக் கருத இடமிருக்கிறது.



18897

*தது. ½–1 அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட பக்ஷா காதம் ஏற்படும்.*[1]

*இதன் அமைப்பில் பங்கு கொள்பவையாவன :*

*அக்குளில் செல்லும் நரம்புப் பின்னல்.*[2]

*அக்குள் சுத்த ரத்தக்குழாய்.*[3]

*அக்குள் அசுத்த ரத்தக்குழாய்.*[4]

*மார்பை மூடும் சிறிய தசையின் கயிறு.*[5]

*மத்யப்பிரகோஷ்ட நரம்பின் முடிச்சு.*[6]

*அந்தப்பிரகோஷ்ட நரம்பு.*[7]

*இங்கு அடிபடுவதால் அந்தக் கையின் இயக்கம் போய் விடும்.*

*இந்தப் பதினொரு மர்மங்கள் ஒவ்வொரு கையிலுமுள்ளவை. ஆக கைகளில் இருபத்திரண்டு மர்மங்கள்.*

*இதேபோல கால்கள் ஒவ்வொன்றிலும் பதினொரு மர்மங்கள் உள்ளன. அவை பின் வருமாறு :—*


***1. க்ஷிப்ரமர்மம் :—*** *காலின் கட்டை விரலுக்கும் அதை அடுத்துள்ள விரலுக்கும் நடுவில் உள்ள ஸ்நாயுமர்மம் காலாந்தர ப்ராணஹர மர்மப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இதில் அடிபட வலிப்பு ஏற்பட்டு மரணம்வரை கெடுதல் ஏற்படும்.*[8]

---

1. वक्षःकक्षयोर्मध्ये कक्षधरं नाम । तत्र पक्षाघातः ।
2. Brachial Plexus [Lateral Median and Posterior cords.]
3. Axillary artery.
4. Axillary vein.
5. Tendon of the Pectoralis minor.
6. Median nerve.
7. Ulnar nerve.
8. तत्र पादांगुष्ठांगुल्योर्मध्ये क्षिप्रं नाम मर्म । तत्र विद्धस्याक्षेपेण मरणम् ।



## கால்களிலுள்ள மர்மங்கள்.



(அ) க்ஷிப்ரம், (ஆ) கூர்ச்சம். (இ) கூர்ச்ச சிரஸ், (ஈ) ஜாநு, (உ) ஆணீ, (ஊ) ஊர்வீ. (எ) லோஹிதாக்ஷம், (ஏ) விடபம்.

இதன் அமைப்பில் காணுபவையாவன :—

கட்டைவிரலை மடக்கும் தசைநார்.[1]


கட்டைவிரலை வெளிப்புறமாக நகர்த்தும் தசைநார்.[2]

கட்டைவிரலுக்கு வரும் நரம்புகள் பின்னல்.[3]

கட்டைவிரலுக்கு வரும் ரத்தக்குழாய் பின்னல்.[4]

கட்டைவிரலுக்கு மேல்புறமுள்ள சலாகை எலும்பின் அடியில் வரும் ரத்தக்குழாய்[5]

கணுக்கால் முன்புற நரம்பின்கிளை.[6]



தலஹ்ருதயம்.

2. **தலஹ்ருதய மர்மம் :—** கால் நடுவிரலுக்கு நேர்கோட்டில் உள்ளங்காலின் நடுவில் உள்ள மாம்ஸமர்மம். காலாந்தர ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குல பரிமாணமுள்ளது இங்கு அடிபடக் கடுமையான வலியால் மரணமீறுன கெடுதி ஏற்படும்.[7]

இது உள்ளங்காலின் வளைவின் நடுவிலே[8] அமைந்துள்ளது.

இங்குள்ள முக்யப் பகுதிகளாவன :—

உள்ளங்கால் வளைவு தமநீ.[9]

உள்ளங்கால் நரம்புகள்[10]

---

1–2. Combined Tendon of Abductor hallucis and Flexor hallucis brevis.

3. Bifercation of first Common digital nerve.

4–5. Bifercation of first Dorsal metatarsal Artery.

6. Deep Peroneal Nerve.

7. मध्यमांगुलीमनुपूर्वेण मध्ये पादतलस्य तलहृदयं नाम। तत्रापि रुजाभिर्मरणम्।

8. Centre of the Planter side.

9. Lateral planter artery.

10. Medial and Lateral planter nerve.



உள்ளங்கால் தசைநார் விரிப்பு.[1]

கட்டைவிரலை வெளியிழுக்கும் தசையின் குறுக்கான தலை.[2]

உள்ளங்கால் நான்குகோண தசை.[3]

விரல்களை மடக்கும் தசை.[4]

இது வலியும் திமிரும் மிகுந்து உபத்திரவிக்கும் இடம்.

3. **கூர்ச்சமர்மம் :—** இது க்ஷிப்ரமர்மத்தின் மேலும் கீழும் உள்ளது. ஸ்நாயுமர்மம். வைகல்யகரப்பிரிவைச் சேர்ந்தது. நான்கு அங்குல நீளமுள்ளது. இங்கு அடிபட கால் உதறுதலும் சுழலுதலும் ஏற்படும்.[5]

இதன் அமைப்பில் உள்ளவையாவன :—

கூர்ச்ச – சலாகா எலும்புகளைப் பிணைக்கும் ஸ்நாயுக்கள்.[6]

விரல்களை நீட்டச்செய்யும் தசை (சிறியது)[7]

உள்ளங்கால் ரத்தக்குழாய்.[8]

விரல்களை நீட்டச்செய்யும் நீள்தசையின் முனை.[9]

கணுக்கால் வெளிப்புற நரம்புகளின் கிளைகள்.[10]

கட்டைவிரலை நீட்டச்செய்யும் நீள்தசை முனை.[11]

மூன்று தலையுள்ள கணுக்கால் வெளிப்புறத் தசையின் முனை.[12]

---

1. Long planter ligament.
2. Oblique head of Abductor hallucis.
3. Quadratus planter muscle
4. Flexor Digitorum Brevis.
5. क्षिप्रस्योपरिष्टादुभयतः कूर्चो नाम। तत्र पादस्य भ्रमणवेपने भवतः।
6. Tarso-Metatarsal and Inter tarsal ligament.
7. Extensor digitorum brevis.
8. Dorsal pedis artery.
9. Tendon of Extensor digitorum longus.
10. Branches of Deep peroneal nerve.
11. Tendon of Extensor hallucis longus.
12. Tendon of peroneal tertius.

உள்ளங்கால் தமனிகள்[1]

விரல்களை விரிக்கும் சிறுதசையின் முனை[2]


**4. கூர்ச்சசிரஸ் மர்மம் :—**

கணுக்கால்பூட்டின் கீழ் இருபுறமும் உள்ள ஸ்நாயு மர்மம். வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. ஒரு அங்குல பரிமாணமுள்ளது. இங்கு அடிபட வலி வீக்கம் ஏற்படும்.[3]

இதன் அமைப்பில் கணுக்காலின் இருபுறங்களிலுள்ள பூட்டுக்கயிறுகள்[4] முக்கியமாயுள்ளன. இவைகளில் ஏற்படும் தாக்குதல் கணுக்காலின் கீழும் கணுக்காலிலும் வீக்கத்தை உண்டாக்குகின்றன. மற்றும் உள்ள உறுப்புகளாவன:—

கணுக்கால் முன்னுள்ள தடித்த தசை நார்[5]

கணுக்காலைச்சுற்றியுள்ள வளையஸ்நாயுக்கள்
(கங்கணிகா ஸ்நாயு[6])




குல்பம் — (பாதம்)

**5. குல்பமர்மம் பாதம் :—** கணுக்கால்பூட்டிலுள்ள ஸந்தி மர்மம். வைகல்யகரமர்மப்பிரிவைச் சேர்ந்தது. இரண்டு அங்குலப்பருமனுள்ளது. இங்கு அடிபட வலி, பாதம் ஸ்தம்பித்து


1. Dorsal inter tarsal artery.
2. Tendon of extensor digitorum brevis.
3. गुल्फसन्धेरध उभयतः कूर्चशिरो नाम । तत्र रुजाशोफौ ।
4. Deltoid ligaments, Talo calcaneal, and Calcaned febular ligament.
5. Tendon of Tibialis anterior.
6. Annular ligament.



அசைக்கமுடியாதிருத்தல், நொண்டி நடத்தல், இவை ஏற்படும்.[1]

இதன் அமைப்பில் கணுக்காலின் இருபுறத்தெலும்புகளும் கீழே ஒன்றோடொன்று உட்புறமாகச்சேர்தல், இவ்விரண்டும் பாதகூர்ச்சாஸ்திகளுடன் சேர்தல்[2] இவை முக்கியமாக இடம் பெறுகின்றன. இவைகளைத்தவிர கணுக்கால் பூட்டின் தசை நார்களும்[3] திரிகோண உருவில் உள்ள குல்பஸந்தியும் முக்கியமாக கவனிக்கத்தக்கவை. இதில் அடிபட பூட்டுகள் விலகுவதோ எலும்புகள் உடைவதோ ஏற்படலாம்.

**6. இந்திரபஸ்தி மர்மம் :—** கணுக்கால் பூட்டிற்கும் முழங்காலுக்கும் நடுவேயுள்ள கீழ் கால் பகுதியின் நடுவில் (ஜங்காஸ்தியின் நடுவில்) உள்ள மாம்ஸமர்மம் ஆடுசதைப் பகுதியிலுள்ளது. காலாந்தரப்ராணஹரமர்மம் அரை அங்குலப் பருமனுள்ளது.[4] இங்கு அடிபட தசைகளிலுள்ள ஸிரைகள் தமனிகள் நசுங்கி ரத்தக்கசிவு ஏற்பட்டு வீக்கம் இசிவு மரணமீறுன உபத்திரவங்கள் ஏற்படலாம்.




இந்திரபஸ்தி

இதன் அமைப்பில் கெண்டைச் சதைகள் மூன்றும்[5] அவைகளின் கீழ் செல்லும் தமனிகளும்[6] கணுக்கால் பின் புறத்து நரம்பும்[7] இருக்கின்றன.

இதன் அமைப்பிற்குட்பட்டவை யாவன :—

1. पादजंघयोः सन्धाने गुल्फो नाम । तत्र रुजः स्तब्धपादता खञ्जता वा ।
2. Inferior Tibio fibular articulation, Ankle joint;
3. Medial Malleolus, Anterior longus, Deltoid ligament, Posterior ligament, Anterior talo fibular ligament, Posterior talo calcaneal ligament; Fibulo calcaneal ligament, Lateral talo calcaneal ligament.
4. पार्ष्णिं प्रति जंघामध्ये इन्द्रबस्तिर्नाम । तत्र शोणिततक्षयेण मरणम् ।
5. Gastronemius, Soleus, Plantaris.
6. Paroneal and posterior tibial artery.
7. Tibial nerve

அரை இடுக்கிலுள்ள சுரங்க வழி [1]

அவ்வழியே செல்லும் சுக்ரக்குழாய் [2]

சுக்ரப்பிரபிகா எனும் கோசமும் அதைச்சுற்றியுள்ள ரத்தக் குழாய்களும் [3]

அண்டகோசத்திற்குச் செல்லும் ரத்தக்குழாய்களும் நரம்புகளும் [4]

இதில் அடிபட அண்டகோசத்தினுள் சுரக்கும் சுக்கிலம் ஆண்குறிக்கு வந்து சேர்வதில் தடையும் நரம்பு பலவீனமும் தளர்ச்சியும் ஏற்படும். பெண்களுக்கு இவ்விடத்தில் பீஜகோசங்கள் [5] இருப்பதும் குறிப்பில் கொள்ளத்தக்கது.

ஆக ஒவ்வொருகாலிலும் பதினொன்று பதினொன்றுகக் கால்களில் 22 மர்மங்கள் உள்ளன. இவைகளுடன் கைகளில் கண்ட இருபத்திரண்டு மர்மங்களையும் சேர்த்து சாகாகத மர்மங்கள் 44 ஆகின்றன.

7. **ஜாநுமர்மம்:—** முழங்காலிலுள்ள ஸந்திமர்மம். வைகல்யகரமாகும். மூன்று அங்குல பரிமாணமுள்ளது. இங்கு அடிபட்டால் கால் நொண்டியாகும்.[6]

இதன் அமைப்பிலுள்ளவையாவன:—

பூட்டைச்சுற்றியுள்ள நார் கவசம் [7]

பூட்டைத் திடப்படுத்தும் தசைநார்கள் [8]

இவைகளில் அடிபடும்போது ஸ்நாயுக்கள் அறுபட்டு பூட்டுகள் தளர்ந்து இயக்கம் தடைபடுகின்றது.

1. Inguinal canal.
2. Spermatic cord.
3. Ductus deferens.
4. Testicular artery, Vein & Nerve.
5. Ovary.
6. जंघोर्वोः सन्धाने जानु नाम । तत्र खञ्जता ।
7. Articular capsule.
8. Ligamentum patellae, oblique popliteal, Ligament, Medeal meniscus, Lateral meniscus, Anterior and Posterior crucial ligament, Tibial collatral ligament, Fibular Collatral ligament, transverse ligament, coronary ligament.

188297


# வாரியர்
# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (ப்ளட் ப்ரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

(1936-ல் நிறுவப்பட்டது.)

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS,**

**MUSK MERCHANTS,**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.



கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs Merchants.

**LUDHIANA, PUNJAB**

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.



**தி இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ்**
**பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185**

**பலகைவாருவதி ரோடு, அடையாறு, மதராஸ் 20.**
**தபால் பெட்டி நெ. 907. போன் நெ. 71628.**

தலைவர்:— டாக்டர் V. நாராயணசாமி, H. P. I. M.
உபதலைவர்:— டாக்டர் M. A. பத்மனுபராவ், L. I. M.

*அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை :—* ரூ. 1,00,000
(பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 20,000 பங்குகள் கொண்டது)

| | | |
|---|---|---|
| வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை | ... ரூ. | 92,880-00 |
| க்ஷேம நிதி | ... ரூ. | 2,96,996-40 |
| கட்டிட நிதி | ... ரூ. | 1,54,144-70 |
| மற்ற நிதிகள் | ... ரூ. | 2,91,858-04 |

*அங்கத்தினராகும் வாய்ப்பு:—*

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள மாகாணங்களில் பதிவு பெற்ற வைத்தியர்களும், மற்றவிதமான தகுதி பெற்ற வைத்தியர்களும்.
2. பஞ்சாயத்து, முனிஸிபாலிடி, ஜில்லா போர்டு ஆகியவையும், மற்றும் இந்திய வைத்திய இலவச ஆஸ்பத்திரி நடத்தும் குழுக்களும், கழகங்களும்.
3. மொத்தமாகவும், சில்லரையாகவும் வியாபாரம் செய்யும் கூட்டுறவு சங்கங்களும்.

நாங்கள் சிறந்த முறையில் சாஸ்திரீய முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை எல்லா இந்திய மருந்துகளைக் கையாளும் வைத்தியர்களுக்கும் சப்ளை செய்கிறோம். நீங்கள் இந்த சங்கத்தில் அங்கத்தினராகிவிட்டீர்களா? இன்றேல், இன்றே விண்ணப்ப பாரத்திற்கும் மற்ற தகவல்களுக்கும் எழுதுங்கள்.

உங்கள் சௌகர்யத்திற்கு எங்கள் வெளியீடுகள்:-

1. **வைத்ய யோகரத்னாவளி** ஆங்கில பிரதி ரூ. 6—00
   „ தெலுங்கு பிரதி ரூ. 6—50
2. **சித்தா பார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00
3. **யூனானி பார்மகோபியா** ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00

*(தபால் செலவும் விற்பனைவரியும் தனி)*

உங்களுடைய தேவைக்கு எங்களுக்கு எழுதவும்—அல்லது
கீழ்க்கண்ட எங்கள் பிராந்திய அலுவலகங்களில் பெறவும்.

(1) 20/320, பெட்டி பொட்டலவாரி தெரு, கவர்னர் பேட்டை, விஜயவாடா–2. (ஆந்திர ராஜ்யம்.) (போன் நெ. 285)
(2) 66, காட்டன்பேட்டை, பெங்களூர்–2. (மைசூர் ராஜ்யம்.)
(3) கள்ளிக்கோட்டை கூட்டுறவு அர்பன் பாங்கு கட்டிடம், கல்லாய் ரோடு, கள்ளிக்கோட்டை–2. (கேரள ராஜ்யம்.)
(4) நகர விற்பனை நிலையம் 4/186, மவுண்ட் ரோடு, சென்னை–2 போன் நெ. 86520.
(5) விற்பனை நிலையம், வைச்ய ஹாஸ்டல் கட்டடம்; கச்சிகூடா ஸ்டேஷன் ரோடு, ஹைதராபாத்.

Y. கொண்டல் ராவ், காரியதரிசி.

VAIDYACHANDRIKA AUGUST—1961 Regd. No. M. 4018.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்ஜீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும்
போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்
**எங்கும் கிடைக்கும்.**

தயாரிப்பவர்:—

**சக்தி விலாஸ வைத்தியசாலா,**

**கரூர். (S. Ry.)**

Printed at the Srivilasam Press, Srirangam and Published by S. V. Radhakrishna Sastri for Tamilnad Ayurveda Maha Mandalam, Chinnakadai Street, Teppakulam, Tiruchy - 2.
Editor: Pandit. S. M. Sundararajacharya, Srirangam, Tiruchi - 6.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |